# <u>கரூர் மாநகராட்சி</u>

## 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் தேதி செவ்வாய்கிழமை மதியம் 12.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

### <u>பொருள்கள்</u>

**1.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட சணப்பிரட்டி பகுதியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக தமிழ்நகர் மற்றும் எழில் நகர் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரினை பாதாள சாக்கடை வசதி அமைக்கும்வரை தற்காலிகமாக கழிவுநீரினை வெளியேற்றும் பணிக்கு ரூ.47.00 இலட்சம் இம்மாநகராட்சிக்கு (25.11.2025 தேதியிட்ட காசோலை) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.15 தமிழ்நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரினை அப்புறப்படுத்துவதற்கு சுத்திகரிப்பு நிலையம் 50 KLD அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/7821/2025)**

**தீர்மான எண்.2990** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**2.** கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.38ல் உள்ள கருப்பக்கவுண்டன் புதூரில் மழைநீர் வடிகால் இருந்தும் கழிவுநீர் வெளியேறுவதற்கு Disposale இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் கழிவுநீர் வெளியேற்றுவதற்கு தரைமட்டத்தொட்டியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டனர். அதன்படி மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் சேகரமாகும் கழிவுநீரினை வெளியேற்றுவதற்கு ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலினை அகற்றிவிட்டு புதிதாக தரைமட்டத்தொட்டியுடன் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே மண்டலம்–3 வார்டு எண்.38ல் உள்ள கருப்பக்கவுண்டன் புதூரில் தரைமட்டத் தொட்டியுடன் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.20.00/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/330/2026)**

**தீர்மான எண்.2991** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

3. கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.40ல் உள்ள சிவாஜி நகர் விஸ்தரிப்பு பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் கழிவுநீர் வீட்டின் அருகில் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதால், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு கோரியதன் அடிப்படையில் மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில் இப்பகுதியில் மழைநீர் வடிகால் வசதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே வார்டு எண்.40ல் உள்ள சிவாஜி நகர் விஸ்தரிப்பு பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.13.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/330/2026)**

**தீர்மான எண்.2992** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

4. கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.38ல் உள்ள காந்திகிராமம் நடுநிலைப்பள்ளி 2003–2004ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளதால் தற்போது அக்கட்டிடத்தின் RCC மேற்கூரை பழுதடைந்து உள்ளது. ஆதலால் அப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியரின் நலன் கருதி கட்டிடத்தின் மேற்கூரை பூச்சு வேலை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்கண்ட பள்ளியில் RCC மேற்கூரை பூச்சு வேலை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.55/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/330/2026)**

**தீர்மான எண்.2993** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

5. கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கிவரும் அனைத்து வாகனங்களுக்கு 2026–2027ம் ஆண்டிற்கான சாலைவரி, பசுமை வரி மற்றும் சேவை கட்டணம் ஆகிய இனங்களுக்கான கட்டணம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் மேற்கண்ட 17 வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய சாலைவரி, பசுமை வரி மற்றும் சேவை கட்டணம் செலுத்துவதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினத் தொகை பொது நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து ரூ.1.00 இலட்சம் இணையதளம் வழியாக செலுத்துவதற்கு ஆகும் செலவினத் தொகை வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதி/குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ7/1577/2014)**

**தீர்மான எண்.2994** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–3 வார்டு எண்.17 எல்.ஐ.சி. நகர் பகுதியில் சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாகவும், அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் சென்னை வர மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் மழைநீர் வடிகால் இல்லாததால் மழை காலங்களில் மழைநீர் தேங்கி நின்று தொற்று நோய்கள் பரவும் வாய்ப்பு உள்ளது. ஆதலால் மேற்படி பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/7821/2025)**

**தீர்மான எண்.2995** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

7. கரூர் மாநகராட்சி மண்டலம் 4க்குட்பட்ட வார்டு எண் 36, 37, 43, 44, 45, 46, 47 மற்றும் 48 ஆகிய பகுதிகளில் உள்ள தெருக்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.2840 நாள்.12.12.2025ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட வார்டு பகுதிகளில் உள்ள தெருகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.13,98,002 யை செலுத்த கோரி கேட்பு பெறப்பட்டுள்ளது. மேலும் புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கு ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. ஆக மொத்தம் ரூ.19,98,002 தேவைப்படுகிறது.

எனவே மேற்கண்ட பணிக்கு அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.11.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.8,98,002/–ற்கு மாமன்றத்தின் அனுமதியும் மற்றும் மேற்கண்ட தொகையில் புதிதாக ஆனந்தம் நகர், முத்தலாடம்பட்டி, ஏமூர் சாலை மற்றும் காளியப்பனூர் ஆகிய தெரு பகுதியில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான கூடுதல் செலவினம் ரூ.8,98,002 வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(7702/2025/இ3)**

**தீர்மான எண்.2996** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**8.** கரூர் மாநகராட்சி வரியில்லா இனங்கள் 2017–2018 முதல் 2019–2020 முடிய GST தொகை ரூ.978035.80/– மற்றும் அபராத தொகை ரூ.1342798.00/– செலுத்த கரூர் சரக்கு மற்றும் சேவை வரித்துறை கண்காணிப்பாளர் அவர்களின் கடித எண்.GEXCOM/TECH/MISC/4519/2025-GST-DIV-KRR நாள்.25.10.2025 தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் உரிய GST கணக்குகள் சரி பார்த்து மாநகராட்சி சார்பாக ஆஜராகவும், இணைய வழியில் மேல்முறையீடு செய்து GST தள்ளுபடி செய்யவும் தெரிவித்து கரூர் மாநகராட்சி சார்பில் திரு.அழகப்பன் வருக்ஷா @ கோ பட்டய கணக்காளர் (CA) திருச்சி அவர்கள் ஆஜராகவும், அதற்கான செலவினத் தொகை ரூ.29500/– மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(அ6/4890/2021)**

**தீர்மான எண்.2997** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9.** கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.38ல் உள்ள கருப்பக்கவுண்டன் புதூர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் சிமெண்ட் சாலை அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே, கருப்பக்கவுண்டன் புதூர் பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**8.00/–** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/7821/2025)**

**தீர்மான எண்.2998** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**10.** கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மாவடியான் கோவில் தெருவில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகள் மற்றும் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற உத்திரவிடக் கோரி திரு ஆர்.பழனியப்பன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு WP(MD) No.3340/2018-ல் தொடர்ந்து, மேற்படி வழக்கின் **19.02.2018**ம் தேதிய தீர்ப்பில் சட்ட விதிமுறைகளை பின்பற்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என உத்திரவிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஆக்கிரமிப்புகள் உரிய அளவீடு செய்யப்பட்டு ஆக்கிரமிப்புதாரர்களுக்கு **13.11.2018** மற்றும் **26.08.2019** ஆகிய தேதிகளில் கரூர் நகராட்சி மூலம் அறிவிப்புகள் வழங்கப்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற நகராட்சி மூலம் நடவடிக்கை எடுத்த போது மேற்படி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்கள் சுமார் 27 குடும்பங்கள் சாலை மறியல் செய்து, ஆக்கிரமிப்பை அகற்றக்கூடாது என போராட்டம் செய்ததால் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்கள் சுமார் 27 குடும்பங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்கள் என்பதால் மேற்படி ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாற்று இடத்தில் பட்டா வழங்கிய பின்னரே ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க இயலும் என வருவாய் துறைக்கு பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மாற்று இடத்தில் பட்டா வழங்குவதற்கு ஆதார் ஆவணங்களை பெற்றுத்தரும்படி வருவாய் துறையால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஆதார் அட்டை நகல் வழங்குமாறு மாநகராட்சி அலுவலர்கள், நகரசார் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் நேரில் கேட்டுக்கொண்டதற்கு ஆக்கிரமிப்புதாரர்கள் ஆதார் அட்டை நகல்கள் தர மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த திரு ஆர்.பழனியப்பன் என்பவர் நீதிமன்ற உத்திரவை செயல்படுத்தவில்லை என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு Cont.P(MD) No.339/2019-ல் தொடர்ந்து, மேற்படி வழக்கு விசாரனைக்கு வந்ததையடுத்து ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மீண்டும் **02.01.2025, 31.01.2025** மற்றும் **10.03.2025** ஆகிய தேதிகளில் அறிவிப்பு மற்றும் இறுதி அறிவிப்பு மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சியால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக மீண்டும் ஆக்கிரமிப்பு பகுதிகளை அளவீடு செய்து Paintனால் அம்பு குறியீடு செய்ய காவல் துறையினர் பாதுகாப்புடன் நகர சார் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலக வட்ட சார் ஆய்வாளர் (Thaluk Deputy Surveyor) ஆகியோருடன் **09.09.2025**ம் தேதியன்று சென்ற போது ஆக்கிரமிப்புதாரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அளவீடு செய்ய மறுத்து சட்டம் ஒழுங்கு சீர்கெடும் வண்ணம் போராட்டம் செய்த நிலையில் காவல் துறை, வருவாய் துறை மற்றும் மாநகராட்சி சார்பில்

பலமுறை எடுத்துக்கூறியும் அளவீடு செய்ய விடாமல் போராட்டம் செய்தனர். இதனால் அளவீடு செய்யும் பணி செய்ய இயலவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட இடத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்கிட ஏதுவாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையின் தீர்ப்பின் படியும், அரசு வழக்கறிஞர் அவர்களின் சட்ட கருத்துருவின் படியும் கள ஆய்வு செய்து, கரூர் மாநகராட்சியில் தீர்மானம் இயற்றி தீர்மான நகலினை அனுப்பகோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் 10.02.2026ம் தேதிய கடித ந.க.எண்.அ4/5267/2025 கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

கரூர் நகரம், நகரளவு வார்டு–2, பிளாக் எண்.17, T.S.No.1112, மாவடியான் கோவில் தெருவில் உள்ள மேற்கண்ட 27 ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கிட அரசாணை எண்.97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்.21.02.2025–ல் வழிவகை செய்யப்பட்டிருப்பின் பட்டா வழங்கிட தடையின்மை சான்று வழங்க மாமன்றம் முடிவு செய்யலாம். **(எப்1/9742/2015)**

**தீர்மான எண்.2999** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11.** கரூர் மாநகராட்சி மண்டலம்–3 வார்டு எண்.42 தாந்தோணிமலை அங்கன்வாடி மையத்தில் நேராய்வு செய்த மாநகராட்சி ஆணையாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்கள் இக்கட்டிடத்தின் வடக்குபுறமுள்ள இருப்பு அறை, கழிப்பிடம் பழுதடைந்துள்ளதனை சரிசெய்யுமாறும் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே மேற்படி அங்கன்வாடி மையத்தில் வடக்குபுறமுள்ள இருப்புஅறை, கழிப்பிடம் கட்டுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/330/2026)**

**தீர்மான எண்.3000** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**12.** கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.47ல் கோடங்கிப்பட்டி பகுதியிலுள்ள சிறிய சமுதாயக்கூடத்தினை நேராய்வு செய்த துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் இக்கட்டிடம் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், இக்கட்டிடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு, முன்புறம் சிறிய அறை, கழிப்பிடம் அறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டது.

எனவே வார்டு எண்.47 கோடங்கிப்பட்டி பகுதியிலுள்ள சிறிய சமுதாயக்கூடத்தில் பழுது பார்த்தல் பணிகள் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்தல், சுற்றுச்சுவர் கட்டுதல் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9.00/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/330/2026)**

**தீர்மான எண்.3001** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**13.** சட்டமன்ற தேர்தல் 2026ல் நடைபெற இருப்பதால் கரூர் மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண். 36, 37 மற்றும் 43–48 வார்டு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் குடிநீர் வசதி, மின்வசதிகள் செய்தல், சாமியானா பந்தல் அமைத்தல், சி.சி.டிவி கேமராக்கல் அமைத்தல், கதவுகள், ஜன்னல்களை சரி செய்தல், பெயிண்டிங் பணிகள் செய்தல், ரேம்ப (Ramp) வசதிகள் செய்தல் போன்ற இதர பணிகளை முன்கூட்டியே செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/4398/2026)**

**தீர்மான எண்.3002** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**14.** கரூர் மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண்.48 காளியப்பனூர் அம்மையப்பன் நகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3003** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**15.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1, 2, 3 மற்றும் 4 க்குட்பட்ட 48 வார்டு பகுதிகளில் முதல்வரின் முகவரி துறையில் மக்களுடன் முதல்வர் Phase –IV முகாம்கள் ஜீலை 2025 முதல் அக்டோபர் 2025 வரை முதல்வரின் முகவரி துறையில் மக்களுடன் முதல்வர் Phase –IV முகாம்கள் நடத்துவதற்கு ஏதுவாக பொதுமக்களின் வசதிக்காக கணிணிகள், பிரிண்டர்கள் தளவாட சாமான்கள் (Stationary) வாடகை அடிப்படையில் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.2608 நாள்.06.08.2025 ஒப்புதல் வழங்கப்பட்டு M/s. Fininity Survey Pvt Ltd, Karur அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ஒப்புதல் பெறப்பட்டத் தொகை ரூ.2.80 இலட்சத்தை விட கூடுதலாக ரூ.27,476/– செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, கூடுதல் செலவினம் ரூ.27,476/–ஐ M/s. Fininity Survey Pvt Ltd, Karur அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/3459/2025)**

**தீர்மான எண்.3004** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**16.** கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமத்தில் திரு.C.மூர்த்தி, என்பவருக்கு சொந்தமான புல எண்.586/113A2–ல் 0.98 ஏக்கர் (அல்லது **3980.00** சதுர மீட்டர்) ஏக்கர் இடத்திற்கு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது உபயோகம் இடத்தினை பத்திர பதிவு ஆவண எண்.493/2025, நாள்.28.01.2025ன் வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.75C2PTHE/2025/TCP நாள்.**31.01.2025**ல் மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.14/2025 (இணையதள ஒப்புதல்) என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள் **22.01.2026**–ஐ மற்றும் நிபந்தனைகளை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம். **(471/2025/எப்1)**

**தீர்மான எண்.3005** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**17.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தில் Water Proofing work and Retaining Wall ஆகிய கூடுதல் பணிக்கு முதன்முறையாக **06.02.2026**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்</u>**

1. M/s.SANKARANAND INFRA, KARUR மதிப்பீட்டைவிட **–0.05** %சதம் குறைவு
2. Thiru.K.RAMESH, KARUR மதிப்பீட்டைவிட **1.00** %சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.**2868**, நாள்.**12.12.2025**ம் தேதி ரூ.**25.00** இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SANKARANAND INFRA, KARUR ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்

3மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/5708/2024)**

**தீர்மான எண்.3006** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**18.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.22 இரத்தினம் சாலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தில் பைப்லைன், வாட்டர் கிளாஸ்செட் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. ஆதலால் மேற்படி பொதுக்கழிப்பிடத்தில் பராமரிப்பு பணி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–2 வார்டு எண்.22ல் உள்ள இரத்தினம் சாலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3007** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**19.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.25 கோவை மெயின் ரோடு கண்ணன் டிபார்மெண்டல் ஸ்டோர் எதிரில் சென்டர் மீடியனில் உள்ள உயர்மின் கோபுர விளக்கு பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேலும் மேற்படி உயர்மின் கோபுர விளக்கு அவ்விடத்தில் தேவைப்படாத காரணத்தினால், வார்டு எண்.23 சர்ச் கார்னர் ரவுண்டானா பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் மற்றும் பயணாளிகள் நலன்கருதி அவ்விடத்திற்கு மாற்றி அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–2 வார்டு எண்.25 கோவை மெயின் ரோடு கண்ணன் டிபார்மெண்டல் ஸ்டோர் எதிரில் சென்டர் மீடியனில் உள்ள உயர்மின் கோபுர விளக்கினை வார்டு எண்.23 சர்ச் கார்னர் ரவுண்டானா பேருந்து நிறுத்தத்தில் மாற்றி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.40/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3008** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**20.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.34 மக்கள் பாதை ரவுண்டான அருகில் இரட்டை வாய்க்கால் பாலத்தின் இடைப்பட்ட பகுதியில் சிலாப் அமைக்கப்படாததால் திடக்கழிவுகள் தேக்கத்தினால் கொசுக்கள் அதிகமாக பரவி அங்குவசிக்கும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்யப்பட்டதில் இப்பகுதியில் கொசுக்கள் பரவாமல் இருப்பதற்கு மூடு சிலாப் அமைக்கப்படுவது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–2 வார்டு எண்.34 மக்கள் பாதை ரவுண்டான அருகில் இரட்டை வாய்க்கால் பாலத்தின் இடைப்பட்ட பகுதியில் மூடு சிலாப் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3009** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**21.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.21 கரூர் மாரியம்மன் கோவில் வைகாசிப் பெருவிழா 2026 மே மாதம் இறுதியில் நடைபெற உள்ளதால், அங்கு வரும் பக்தர்கள் பாதுகாப்பாக திருவிழா கொண்டாடும் பொருட்டு ஜவஹர் பஜார், கருப்பாயி கோவில் இறக்கம், மாவடியான் கோவில் இறக்கம், சாரதா பள்ளி இறக்கம், வஞ்சியம்மன் கோவில் இறக்கம், அடுக்குமாடி குடியிருப்பு இறக்கம்,

படிகட்டுத்துறை இறக்கம், அமராவதி ஆற்றுப்படுகை மற்றும் அமராவதி பாலம் ஆகிய பகுதிகளில் மின்விளக்கு அமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–2க்குட்பட்ட மேற்கண்ட பகுதிகளில் மின்விளக்கு அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3010** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**22.** கரூர் மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.21 கரூர் மாரியம்மன் கோவில் வைகாசிப் பெருவிழா 2026 மே மாதம் இறுதியில் நடைபெற உள்ளதால், அதற்குரிய அடிப்படை வசதிகளான குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகள், பாதுகாப்பு வசதிகள், அமராவதி ஆற்றுப்படுகை, கருப்பாயி கோவில் இறக்கம், மாவடியான் கோயில் இறக்கம், வஞ்சியம்மன் கோவில் இறக்கம், சாய்பாபா கோவில் இறக்கம் மற்றும் படிகட்டுத்துறை இறக்கம் ஆகிய பகுதிகளை சுத்தம் செய்யவும், தேவையான இடங்களில் மண் நிரப்பி சமன் செய்யவும், ஆற்றுப்படுகையில் உள்ள முற்செடிகளை அகற்றவும், கண்காணிப்பு கேமரா அமைக்கவும், பக்தர்கள் குளிப்பதற்கு கருப்பாயி கோவில் இறக்கத்திலும், பசுபதிபாளையம் இணைப்பு பாலத்தில் தற்காலிகமாக பைப் அமைக்கவும் மற்றும் நீர்ஊற்று அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3011** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**23.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 1 வார்டு எண்.3–ல் தில்லை நகர் 1வது கிராஸ் முதல் 8வது கிராஸ் வரை இணைக்கும் தில்லைநகர் மெயின் ரோட்டில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதம் அடைந்துள்ளது. இதனை சரிசெய்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–1 வார்டு எண்.3ல் உள்ள தில்லை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் சரிசெய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.38.00/–இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3012** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**24.** கரூர் மாநகராட்சி மண்டலம்–1 வார்டு எண்.6ல் உள்ள எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–1 வார்டு எண்.6ல் உள்ள எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3013** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**25.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – 1 வார்டு எண்.1–ல் கே.பி நகர் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை அமைத்து தர அப்பகுதி மக்கள் கோரிக்கை அளித்துள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் பாதாள சாக்கடை அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம் – 1 வார்டு எண்.1–ல் கே.பி நகர் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூபாய் **6.00/–**இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3014** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**26.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1 வார்டு எண்.10–ல் என்.எஸ்.கே நகர் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை அமைத்து தர அப்பகுதி மக்கள் கோரிக்கை அளித்துள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் பாதாள சாக்கடை அமைப்பது அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–1 வார்டு எண்.10–ல் என்.எஸ்.கே நகர் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**2.00/–** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3015** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**27.** கரூர் மாநகராட்சி மண்டலம் – **1** வார்டு எண்.**6**–ல் ராஜீவ் காந்தி நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–**1** வார்டு எண்.**6**ல் உள்ள ராஜீவ் காந்தி நகர் பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**15.00/–**இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3016** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**28.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–**1** வார்டு எண்.**3**–ல் வி.வி.ஜி நகர் பகுதியில் உள்ள இரண்டாவது மற்றும் மூன்றாவது குறுக்கு சாலையில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதம் அடைந்துள்ளது. மழைநீர் வடிகால் அமைத்து தர அப்பகுதி மக்கள் கோரிக்கை அளித்துள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் மழைநீர் வடிகால் அமைப்பது மற்றும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–**1** வார்டு எண்.**3**–ல் வி.வி.ஜி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**31.20/–** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3017** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**29.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் – **1** வார்டு எண்.**3**–ல் தில்லை நகர் **4**வது கிராஸ் மற்றும் **8**வது கிராஸ் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் இரு புறமும் மிகவும் சேதம் அடைந்துள்ளது. புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். அதன்படி மேற்படி இடத்தினை ஆய்வு செய்ததில் மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, மண்டலம்–**1** வார்டு எண்.**3**ல் உள்ள தில்லை நகர் பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**22.75/–**இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3018** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**30.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நவீன வசதிகலுடன் கூடிய புதிய நீச்சல் குளம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்–6992/2025/மாநஆ.3, நாள்.24.04.25ல் அனுமதி வழங்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கங்கப்பட்ட மதிப்பீட்டில், UPS, முகப்புத்தோற்றம், மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அமைப்பதற்கு வழிவகை இல்லாததால் தற்போது இந்த கூடுதல் பணிகள் செய்வது மிகவும் அவசியமாகிறது.

எனவே மேற்கண்ட நீச்சல் குளம் கட்டும் பணியில் UPS, முகப்புத்தோற்றம், (ம) பாதுகாப்பு உபகரணங்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25.00/– இலட்சத்துக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3019** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**31.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றி கொண்டு இருக்கும், தெரு நாய்களை தற்போது உச்ச நீதிமன்றத்தின் உத்திரவின் படி நாய்களை பிடித்து உடனடியாக கருத்தரித்தல் தடை அறுவை சிகிச்சை செய்வது அவசியமாகறிது. இதற்காக Compost yard-ல் ABC Center அமைக்கப்பட்டு உள்ளது. இதில் அறுவை சிகிச்சை செய்ய கூடுதலாக அறுவை சிகிச்சை உபகரணங்கள் தேவைப்படுவதாக மாநகர சுகாதார அலுவலர் அவர்கள் குறிப்பு வழஙகியுள்ளார். எனவே மேற்படி ABC Centerல் கூடுதலாக தேவைப்படும் உபகரணங்களை TNMSC இல்லாத மருந்துகளை வெளி சந்தையில் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.30/–இலட்சத்துக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் **(இ1/326/2026)**

**தீர்மான எண்.3020** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**32.** கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.47 கோடங்கிப்பட்டி முத்தலாம்மன் நகர் பகுதியில் குடிநீர் பயன்பாடு அல்லாத நீரின் தேவைக்காக புதியதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்பவர் பம்ப் வசதி மற்றும் குடிநீர் தொட்டி, குழாய்கள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதால் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | M/s.Malliga Engineering Contractor, Karur | 0.07% குறைவு |
| 2 | M/s.Navaladiyan Electrical & Rewinding works, Karur | 1.87% அதிகம் |
| 3 | M/s.Vadivel & Co, Karur | 5.53% அதிகம் |

அலுவலகக்குறிப்பு:

1) மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியதையும், இதற்கான செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.3021** பதிவு செய்யப்பட்டது

**33.** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் –2 வார்டு எண்.21 காமராஜ் சந்தையில் குத்தகை இனங்களுக்கு மாநகராட்சி மூலம் வசூல் செய்ய இரசீதுகள் அச்சடிக்க விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், 12.02.2026 அன்று கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | விபரம் | ரசீதுகள் | கட்டணம் | மார்டன் பிரிண்டர்ஸ்14, பிரம்மதீர்த்தம் ரோடு, கரூர் | திருமால்அச்சகம், கலைஞர் அறிவாலயம் அருகில் | வேலன் ஆப்செட் பிரிண்டர்ஸ், 22பி, வேலம்மாள்லேவுட், கரூர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 6000 வரை | ரூ.75/– (நாள்ஒன்றுக்கு) | 2550 | 3600 | 3250 |
| 2 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 7000 வரை | ரூ.60/– (நாள்ஒன்றுக்கு) | 2975 | 4000 | 3625 |
| 3 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 1000 வரை | ரூ.100/– (நாள்ஒன்றுக்கு) | 800 | 2050 | 1500 |
| 4 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 200 வரை | ரூ.125/– (நாள்ஒன்றுக்கு) | 300 | 1400 | 900 |
| 5 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 2500 வரை | ரூ.150/– (நாள்ஒன்றுக்கு) | 1062 | 2200 | 1750 |
| 6 | சுங்கவிகிதம் (கடைஒன்றுக்கு) | 1 முதல் 1000 வரை | ரூ.25/– (நாள்ஒன்றுக்கு) | 1800 | 3000 | 2300 |
| | | | | **9487** | **16250** | **13325** |

மேற்படி விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(7763/அ6/2020)**

அலுவலககுறிப்பு

1) மாமன்றம் முடிவு செய்யலாம்.
2) குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய மார்டன் பிரிண்டர்ஸ், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிமேற்கொள்ள மாமன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண்.3022** குறைந்த விலைப்புள்ளிகள் வழங்கிய மார்டன் பிரிண்டர்ஸ், கரூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கி பணிமேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

34 .கரூர் மாநகராட்சி **முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையத்தில்** வந்து செல்லும் இருசக்கர மற்றும் நான்கு சக்கரவாகன நிறுத்துமிடத்திற்கான 17.02.2026 –ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. மேற்படி பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது **(3030/2025/அ6)**

| வ.எண் | பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளித்தொகை |
|---|---|---|
| 1 | ப.பூபதி,<br>த/பெ,பழனிச்சாமி,<br>38, சோபிகாநிவாஸ்,<br>வடக்குகாந்தி கிராமம்,<br>கரூர் | ரூ.15,80,000/– (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| 2 | எம்.ஜெயஸ்ரீ,<br>க/ப, பி.நாச்சிமுத்து மோகனசுப்பு,<br>31, சக்திநகர், தெற்கு காந்திகிராமம்,<br>கரூர். | ரூ.15,85,000/– (ரூபாய் பதினைந்து இலட்சத்து எண்பத்து ஐயாயிரம் மட்டும்) |

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.எம்.ஜெயஸ்ரீ என்பவரின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியானது அரசாங்க மதிப்பைக்காட்டிலும் கூடுதலாக உள்ளதால், ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றம் பரிசீலனை செய்து முடிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.3023** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**35. திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.**

12வது வார்டுக்குட்பட்ட பசுபதிபாளையம் வடக்கு தெரு லக்கி சாமி வீட்டிற்கு அருகில் கீழமேல் ரோட்டில், ஆண்டவர் நகர் செல்லும் வழியில் மின் கம்பம் எண்.RC MC 23 N 12S.P7 உள்ளது. விபத்துகளை தவிர்க்க அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி மின்கம்பத்தினை மாற்றித் தருமாறு இம்மான்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.3024** திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12–வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன் மொழிந்து திருமதி.சரண்யா குழந்தைவேல் 13வது மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழி மொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

36.<u>வணக்கத்திற்குரியமேயர் அவர்கள் தாம் முன் மொழிவதாக உள்ள தீர்மானம்.</u>

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட, வார்டு எண்.2, பெரியகுளத்துப்பாளையம், ஜாமியா நகர் பகுதியில் சுமார் 260 குடும்பங்கள், கடந்த 35 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள். மேற்கண்ட பகுதியில் உள்ள தெருக்களுக்கு இனாம் கரூர் பேரூராட்சியாக இருந்த போது பேரூராட்சியால் மண் சாலைகள் அமைத்து மின் விளக்குகள் அமைத்து கொடுக்கப்பட்டது. மேலும் அப்பகுதியில் உள்ள தெருக்கள் அனைத்தும் தற்போது வரை மண் சாலையாகவே உள்ளது. தற்போது மண் சாலையும் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாமலும் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொது மக்கள் சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அப்பகுதியில் மழைநீர் வடிகால்

இல்லாததால் தெருக்களில் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி அப்பகுதிமக்களுக்கு தொற்று நோய் ஏற்பட்டு பாதிக்கப்படுகின்றனர். எனவே மேற்படி பகுதிக்கு மண்சாலையை தார் சாலையாக மாற்றிக்கொடுக்கும்படியும் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்து கொடுக்கும்படியும் ஜாமியா நகரில் வசிக்கும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட பகுகிதயில் மண்சாலையை தார் சாலையாக மாற்றிடவும் மற்றும் மழைநீர் கால்வாய் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண்.3025** வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானத்தில் 35 வருடங்களாக எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி ஜமியாநகரில் வசிக்கும் பொது மக்களின் அடிப்படை தேவைகளை உடனடியாக நிறைவேற்ற இம்மாமன்றம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி